3. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.....

திரு. ப. பொன்னுரங்கம் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் சம்பந்தப்பட்ட பல சட்ட முன்வடிவுகள் விவாதத்திற்கு வரவிருக்கின்றன. அவற்றுக்கு நாங்கள் சில அமெண்ட்மெண்டுகள் கொடுத்திருக்கிறோம். சட்ட முன்வடிவுகள் விவாதத்திற்கு வரும் போது அவற்றுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களும் அவையில் வைக்கப்படுவது பழைய வழக்கம். இன்றைக்கு அந்தத் திருத்தங்கள் வைக்கப்படவில்லை. வீட்டுக்கு அனுப்பி விட்டதாகச் சொல்லலாம். கேள்வித்தாள் எல்லாம் வீட்டுக்கு வருகின்றன. ஆனால் இங்கேயும் வைக்கப்படும்; இன்றைக்கு வைக்கப்படவில்லை ; வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கின்றன. இதிலே ஒழுங்குப் பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் இன்றைய தினம் பரவலாக கிராமங்களில் காலரா நோய் பரவி, பலர் இறந்திருக்கிறார்கள். அதுபற்றி 3 ஆம் தேதியே ஒரு கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன். அது மிக முக்கியமான பிரச்சினை. ஆகவே, அதை இன்றைக்கே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–30)

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கரும்புக்கு சென்ற ஆண்டு அறிவித்த விலையை இவ்வாண்டு அரசு குறைத்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், எம். செல்லமுத்து, டி. மணி, கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், என். சங்கரய்யா, என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி, வி. கிருஷ்ணமூர்த்தி, சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி ஆகி